**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 182/2019 |
| Name | : Vinothkumar |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**06.02.2026**

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை ESI மருத்துவமனையில் மருத்துவராக உள்ளேன். கடந்த 13.04.2016ம் தேதி நான் மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்த போது காலை 11.25 மணியளவில் நாட்ராயன் மகன் நாகராஜன் (வயது 56) என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த 6 நபர்களால் கட்டை மற்றும் கைகளால் அதே நாளில் காலை 11.00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தாக்கப்பட்டதாக சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்ததில் அவர் நெஞ்சில் வலி மற்றும் வலது முட்டியில் வலி இருந்ததாக சொன்னார். நெஞ்சில் மற்றும் வலது முட்டியில் வெளிக்காயம் எதுவும் இல்லை.

1. சிராய்ப்பு காயம் இடது நடுவிரலில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது

அவரை உடுமலை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அதே நாளில் காலை 11.25 மணியளவில் நாகராஜன் மனைவி பிரேமா (வயது 55) என்பவர் சிகிச்சைக்கு வந்தார் அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. மேல் சிகிச்சைக்காக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கருத்துறு பெறப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அதே நாளில் காலை 11.45 மணியளவில் நாகராஜன் மகன் ராம்குமார் (வயது 31) என்பவர் அடையாளம் தெரிந்த 4 நபர்களால் கற்கள், கட்டை மற்றும் கைகளால் அதே நாளில் காலை 11.00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தாக்கப்பட்டதாக சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்ததில்

1. சிராய்ப்பு காயம் இடது கணுக்காலில் காணப்பட்டது

2. சிராய்ப்பு காயம் 1*1 செ.மீ அளவில் வலது முழக்கையில் காணப்பட்டது

அவரை வெளி நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.1 ராம்குமார், அ.சா.2 நாகராஜன் இருவரும் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது தடுமாறி கீழே விழுந்தால் இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.06 18:02:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்